**O.S.No.115/2015**

**Date : 08.06.2022**

**வா.சா.2 அய்யப்பன்**

**பி.த.கு.வி**

பொன்னுச்சாமி ஆசாரி, 1ஆம் வாதியின் சரஸ்வதி தம்பதியினர் பெற்ற பிள்ளை நான் கிடையாது என்றால் சரிதான். என்னுடைய இயற்கை தகப்பனாரானவர் 1ஆம் வாதியின் சகோதரர் மனோகரன் என்றால் சரிதான். என்னுடைய இயற்கை தாய் பெயர் கோமதி ஆகும். என்னுடைய இயற்கை பெற்றோரான மனோகரன், கோமதி தற்பொழுதும் உயிரோடு தான் உள்ளனர். என்னுடைய இயற்கை பெற்றோருக்கு என்னை அல்லாமல் மற்றுமொரு மகனும், மகளும் உள்ளனர். என்னுடைய இயற்கை பெற்றோருக்கு நான் தான் முதல் பிள்ளை என்றால் சரிதான். நான் 6ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய இயற்கை பெற்றோர் தான் என்னை பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய வளர்ப்பு பெற்றோர் தான் படிக்க வைத்தார்கள். நான் 1 முதல் 6ஆம் வகுப்பினை தளவாய்புரத்தில் உள்ள மாரிமுத்து நாடார் பள்ளியில் படித்தேன். என்னுடைய இயற்கை பெற்றோர் நான் படித்த தளவாய்புரத்தில் தான் உள்ளனர் என்றால் சரிதான். நான் படித்ததற்கான பள்ளி மாற்று சான்றிதழை என்னுடைய வளர்ப்பு அப்பா பொன்னுச்சாமி வைத்திருந்தார்., அவர் காலமான பின்னர் அது என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. என்னுடைய பள்ளி மாற்று சான்று என் வசம் தான் உள்ளது என்றாலும், அதில் என்னுடைய பெற்றோா விபரத்தில் என்னுடைய இயற்கை பெற்றோரின் விபரம் குறிப்பிட்டுள்ளமையால் வேண்டுமென்றே அது என்ன ஆனது என தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தற்பொழுது சுமார் 32 வயது இருக்கும். பொன்னுச்சாமி, 1ஆம் வாதி தம்பதியினர் எனக்கு 1 வயது இருக்கும்பொழுது தத்து எடுத்தார்கள். அவ்வாறு தத்து எடுத்ததற்கு எழுத்து மூல ஆவணம் எதுவும் ஏற்படவில்லை. எனக்கு 1 வயது இருக்கும்பொழுது என்னை தத்து எடுத்ததாக பிராது மற்றும் முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய இயற்கை பெற்றோரை விசாரித்தால் என்னை தத்து கொடுத்தார்களா இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

தாவா 1ஆம் இன சொத்தின் விஸ்தீரணம், அளவுகள் எனக்கு தெரியாது. தாவா 1ஆம் இன சொத்திற்கு மேற்கில் ராமசாமி தேவர் வீடு, தெற்கில் சிவசுப்பிரமணிய ஆசாரி, கருப்பையா ஆசாரி வீடு, கிழக்கில் சோமசுந்தரம் கிரையம் கொடுத்த இடம், வடக்கில் தெரு உள்ளது. மேற்கண்ட நான்கு மாலினை பொன்னுச்சாமி 1ஆம் வாதிக்கு ஏற்படுத்தி வைத்த பத்திரத்தின் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா 1ஆம் தபசில் சொத்து பொன்னுச்சாமி ஆசாரிக்கு அவரது குடும்பத்தில் தனித்து கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். பொன்னுச்சாமி ஆசாரி, 1ஆம் வாதி தம்பதியினருக்கு பிள்ளைகள் பிறக்கவில்லை என்றால் சரிதான். பொன்னுச்சாமி ஆசாரி, 1ஆம் வாதி தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்பதால் அவர்கள் இருவரும் 1991ஆம் ஆண்டு மனம் ஒத்து இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தனர் என்றால் சரியல்ல. பொன்னுச்சாமி ஆசாரியும், 1ஆம் வாதியும் என்னை தத்து எடுத்து பிள்ளையாக வளர்க்கவில்லை என்றால் சரியல்ல. 1ஆம் வாதி ஏற்கனவே வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான். பொன்னுச்சாமி ஆசாரி. தாவா சொத்தினை 1ஆம் வாதிக்கு தான் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றாலும், எனக்கு ஆவணங்கள் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். தாவா 1ஆம் தபசில் சொத்தில் எனக்கு பாத்தியதை எதுவும் தற்பொழுது இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து 1ஆம் வாதி பெயரில் விளம்புகை பரிகாரம் கோரி தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் யாதொரு பாத்தியதையும் உரிமையும் இல்லாத நானும் சேர்ந்து தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. 1ஆம் வாதி எனக்கும் சேர்த்து சாட்சியம் அளித்துள்ளதாக தான் கூறியுள்ளார் என்றால் சரிதான். 1ஆம் வாதி சாட்சியம் அளிக்கும் பொழுது நானும் உடன் வந்திருந்தேன் என்றால் சரிதான். 1ஆம் வாதி ஏற்கனவே எனக்கும் சேர்தது சாடசியம் அளித்துள்ள நிலையில் அதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய மீண்டும் நான் அளிக்கும் சாட்சியம ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. பொன்னுச்சாமி ஆசாரி 1995ல் அளித்த

வழக்கறிஞரின் அறிவிப்பிற்கு பின்னர் 1ஆம் பிரதிவாதியை தாவா சொத்திலிருந்து காலி செய்ய நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திலிருந்து 1ஆம் பிரதிவாதியை காலி செய்ய கோரி 2008 ஆம் ஆண்டு 1ஆம் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். அதன்படி நானும், 1ஆம் வாதியும் சேர்ந்து மு.வ.எண்.261/2010 வழக்கினை தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கு முழு விசாரணைக்கு பின்னர் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். அத்தீர்பபின் மீது மேல்முறையீடு செய்யாமல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு முன்தீர்ப்பு தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு உ.வி.மு.ச கட்டளை 2 விதி 2ன் கீழ பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கோ, 1ஆம் வாதிக்கோ யாதொரு பாத்தியதையும் உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஏற்படுவதற்கு முன்னரே 1994ஆண்டு வாக்கில் தாவா சொத்தினை பொன்னுச்சாமி ஆசாரி அவரது காதல் மனைவியான 1ஆம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக நன்கொடை கொடுத்து அதன்படி தாவா சொத்தின் சுவாதீனத்தையும் 1ஆம் பிரதிவாதி வசம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதன்படி தாவா சொத்திற்கு 1ஆம் பிரதிவாதி பெயரில் பெயர் மாற்றம் செய்து தீர்வை செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த உரிமையின்படி 1ஆம் பிரதிவாதி தாவா சொத்தினை 2ஆம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதன்படி தாவா சொத்து 2ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற பின்னர் தாவா சொத்தில் 1ஆம் பிரதிவாதி ஒத்திதாரராக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அதன்பின்னர் 2015ஆம் ஆண்டு 1ஆம் பிரதிவாதி வெளியூர் சென்றிருந்த நிலையில் தாவா 3ஆம் இன சொத்தில் நாங்கள் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்துவிட்டோம்

என்றால் சரியல்ல. 16.10.2015 முதல் தாவா 3ஆம் தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பாளராக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா 3ஆம் இன சொத்தில் இருந்து எங்களை அப்புறப்படுத்த 1, 2 பிரதிவாதிகள் கேட்ட நிலையில் அதில் இருந்து தப்பிப்பதற்காக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் அதன்படி 1ஆம் வாதி தாவா சொத்தினை அடைந்து அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. தாவா 3ஆம் இன சொத்தில் நாங்கள் ஆக்கிரமிப்பாளராக உள்ளதால் 2ஆம் பிரதிவாதி கோரியுள்ள எதிர் கோரிக்கை அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றாலும், எதிர் கோரிக்கை அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.15 ஆவணங்கள் என்னால் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. 1ஆம் வாதியின் தத்து பிள்ளை என கூறி நான் பொய்யாக 1ஆம் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளமையால், என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.